# உதகமண்டலம் நகராட்சி

நகர்மன்றம்
உதகமண்டலம்
30–11–2021.

அன்புடையீர்:

வணக்கம். இந்நகராட்சியின் நவம்பர் 2021–ம் மாத சாதாரண கூட்டம் வருகிற 30.11.2021 அன்று காலை 11.00 மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

1. இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகளை தீட்டுக்கல்லில் அமைந்துள்ள உரக்கிடங்கில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக தரம்பிரித்தல், குப்பைகளை உரமாக்க பயன்படுத்தப்படும் இயந்திரம் உள்ளிட்ட அனைத்து இயந்திரங்களையும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு, திருவாளர்.ஸ்ரீ ஆதித்யாஅசோசியேட்ஸ், உதகமண்டலம் என்ற தனியார் நிறுவன ஒப்பந்ததாரர் மூலம் வெளிக் கொணர்வு பணியாளர்கள் 28 நபர்களை கொண்டு பணி மேற்கொள்ள காலநீட்டிப்பு செய்து வழங்கப்பட்ட 06.09.2021ம் தேதி முதல் 89 நாட்களுக்கான பணி உத்தரவு உடன் படிக்கையானது வரும் 05.12.2021ம் தேதியுடன் முடிவடையவுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுகூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளதிற்கிணங்கவும், ஆணையாளர் அவர்களின் குறிப்புகளின் படியும் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நகராட்சிகளிலும் தனியார் வெளிகொணர்வு நிறுவன ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்படும தினசரி கூலியானது வெவ்வேறு தொகையாக உள்ளதினால், தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளின் ஒரே மாதிரியான அடிப்படை தினசரி கூலி விலை விகிதம் நிர்ணயம் செய்யும் பொருட்டு கோரிய கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துருக்களின் அடிப்படையில் தினசரி கூலி நிர்ணயம் செய்து உரிய உத்தரவு நாளது தேதி வரை வரப்பெறாதக் காரணத்தினலும் உத்தரவு பெறப்படும் வரை பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கும் வரை தற்போது பணி செய்து வரும் மேற்படி தனியார் நிறுவனத்தின் பணி உத்தரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விலை விகிதத்திலேயே தொடர்ந்து மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்து வழங்கவும், மேற்காணும் பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.20 லட்சத்திற்கும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.20 லட்சத்தினை இந்நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**
3. **புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும் வரை தற்போது பணி மேற்கொண்டுள்ள ஒப்பந்த நிறுவனம் மேற்படி பணிகளை செய்துவர பொதுசுகாதார அவசர மற்றும் அவசியம் கருதி அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.எச்1/5681/2019)**

**தீர்மான எண்.2802 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

2. தமிழ்நாடு அரசு – பணியமைப்பு – நகராட்சி பொது சுகாதாரப்பணிகள் – துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் – அளவு கோல் – திருத்தியமைத்த அரசாணை எண்:101, நாள்: 30.04.1997ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி உதகமண்டலம் நகராட்சியில் மொத்தம் 394 தூய்மைப்பணியாளர்கள் பணி அமர்த்தப்பட வேண்டும். ஆனால் 321 பணியிடங்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் தற்போது 142 தூய்மைப் பணியாளர்கள் மட்டுமே நாளது தேதியில் பணியாற்றி வருகிறார்கள், 179 தூய்மைப் பணியாளர்கள் பணியிடங்கள் காலியாகவுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்:26356/P3/2018,நாள்:05.10.2018 ல் வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் திருவாளர்.ஸ்டார் கான்ட்ராக்டர், உதகமண்டலம் எனும் தனியார் வெளிக்கொணர்வு நிறுவன ஒப்பந்தத்தாரர் மூலமாக (Private Out Sourcing Contractors) 150 தூய்மைப் பணியாளர்கள் நகராட்சிக்குட்பட்ட 15 வார்டுகளில் சுகாதாரப்பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். இத்தனியார் நிறுவனத்தின் 01.12.2018 முதல் 30.11.2021 வரையிலான 3 வருட ஒப்பந்த உடன்படிக்கைக்காலம் வரும் 30.11.2021 ம் தேதியுடன் முடிவடைகிறது.

நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் பிரசித்திப்பெற்ற சர்வதேச சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. உதகைக்கு நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆயிரக்கணக்கானோர் நாள்தோறும் வந்து செல்கின்றனர் மற்றும் நாட்டின் மிக முக்கிய பிரமுகர்களும் (President of India, Governors, Chief Ministers and other Higher Officials) வந்து செல்கின்றனர். இதனால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளின் சுற்றுப்புற சூழல் மற்றும் நகரின் அனைத்து பகுதிகளையும் மிகவும் சுகாதாரமாகவும், தூய்மையாகவும் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

உதகமண்டலம் நகராட்சி 30.67 ச.கி.மீ பரப்பளவில் 36 வார்டுகளை உள்ளடக்கிய 7 சுகாதாரப்பிரிவுகளைக் கொண்டதாகும், இந்நகராட்சி பகுதிகளை தினசரி சுத்தம் செய்தல், சேகரமாகும் குப்பை கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்து அகற்றும் பணிகள், கொரோனா வைரஸ் தொற்று நோய் (Covid-19) பரவுதல் தடுப்பு நடவடிக்கைகள் ஆகிய பணிகளை ஒதுக்கீடு செய்யப்பட்ட 321 தூய்மைப் பணியாளர்களில் 142 பணியாளர்களை மட்டும் கொண்டு மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுகூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளதிற்கிணங்கவும், ஆணையாளர் அவர்களின் குறிப்புகளின் படியும் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நகராட்சிகளிலும் தனியார் வெளிகொணர்வு நிறுவன ஒப்பந்த தூய்மைப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினசரி கூலியானது வெவ்வேறு தொகையாக உள்ளதினால், தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளில் ஒரே மாதிரியான அடிப்படை தினசரி கூலி விலை விகிதம் நிர்ணயம் செய்யும் பொருட்டு கோரிய கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துருக்களின் அடிப்படையில் குறைந்தபட்ச தினசரி கூலி நிர்ணயம் செய்து உரிய உத்தரவு நாளது தேதிவரை வரப்பெறாதக் காரணத்தினாலும், உத்தரவு பெறப்படும் வரை பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கும் வரை தற்போது பணி செய்து வரும் மேற்படி தனியார் நிறுவனத்தின் பணி உத்தரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித்லைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விலை விகிதத்திலேயே

(ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகை) தொடர்ந்து மேற்கொள்ள ஒரு மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கவும், மேற்காணும் பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.35.00 லட்சத்திற்கும் தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி ஒரு மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்ய தனி அலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.35.00 லட்சத்தினை இந்நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**
3. **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை தற்போது பணிமேற்கொண்டுள்ள தனியார் வெளிக்கொணர்வு ஒப்பந்த நிறுவனம் மேற்படி பணிகளை செய்துவர பொதுசுகாதாரப் பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்: எச்1/10891/2015)**
   **தீர்மான எண்.2803 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:21287/2021EA2ல், நாள்:02.10.2021ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை, வடிகால் பராமரிப்பு மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிக்கு பணியாளர்கள் பணியமார்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து வழங்கியுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி உதகமண்டலம் நகராட்சிக்கு கீழ்க்கண்டுள்ளவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

**குடிநீர் பராமரித்தல்**

உதகமண்டலம் நகராட்சி 1866ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு 1987ம் ஆண்டு முதல் சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டுவருகிறது. 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 88430 மற்றும் தற்போதுள்ள மக்கள் தொகை 103800 ஆகும். மேலும் இந்நகராட்சியின் பரப்பளவு 30.67 சதுர கிலோமீட்டர் கொண்ட 36 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகரில் மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 27950 ஆகும்.

உதகமண்டலம் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் குடிநீர் பராமரிப்பு திட்டத்தின் கீழ்குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு பணியாளர்கள் எண்ணிக்கை 86 ஆகும், தற்போது 15 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் நகரில்குடிநீர் பராமரிப்பு திட்ட பணிகளை மேற்கொள்ளவது மிகவும் சிரமமாக உள்ளது.

எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி நியமனம் செய்ய உரிய வழிமுறைகள் வழங்கப்பட்டதன் பேரில், இந்நகராட்சி குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் நியமானம் செய்ய கீழ்க்கண்டுள்ளவாறு கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சி குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்ணயம் செய்யப்பட்டுள்ளஅளவுகோல் படி தேவைப்படும் குடிநீர் பராமரிப்புபணியாளர்கள் விவரம்

| வ. எண் | பணிவிவரம் | ஆளவுகோல் படி (As Per Norms) தேவைப்படும் பணியாட்கள் | தற்போது பணிபுரியும் பணியாட்கள் | தேவைப்படும் பணியாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் பராமரிப்பு பணி மேற்கொள்ள தேவைப்படும் பணியாளர்கள் | 88 | 17 | 71 |
| | மொத்தம் | 88 | 17 | 71 |

இந்நகராட்சி குடிநீர் பராமரிப்பு பணி மேற்கொள்ள தேவையான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தப்புள்ளிகோரி பணிகள் மேற்கொள்ள ஆண்டு ஒன்றிற்கு ரூ.188.82 இலட்சம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு உத்தேசசெலவினம் ரூ.188.82*3=ரூ.566.49/-இலட்சம் செலவினத்திற்கு தனிஅலுவலர் அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **உதகமண்டலம் நகராட்சியில் குடிநீர் திட்டத்தின கீழ் குடிநீர் பராமரிப்பு பணி 3 வருடங்கள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
2. **ஒப்பந்த செய்யும் நாளிலிருந்து 1 ஆண்டு முடியும் போது பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்தத் தொகை உயர்வு செய்து மன்ற ஒப்பதலுடன் ஒப்பந்தம் புதுப்பிக்கமன்றம் அனுமதிக்கலாம்.**
3. **பணி உத்தரவு நாளிலிருந்து ஒரு வருடம் கலத்திற்கான உத்தேச செலவினத் தொகைரூ.188.82/-இலட்சதினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.**

   **(ந.க.எண்:7875/2021/இ1)**

   **தீர்மான எண்.2804 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

4. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:21287/2021EA2ல், நாள்:02.10.2021ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை, வடிகால் பராமரிப்பு மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிக்கு பணியாளர்கள் பணியமார்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து வழங்கியுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி உதகமண்டலம் நகராட்சிக்கு கீழ்க்கண்டுள்ளவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

**பாதாளசாக்கடைபராமரித்தல்**

உதகமண்டலம் நகராட்சி 1866ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு 1987ம் ஆண்டு முதல் சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டுவருகிறது. 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள்தொகை 88430 மற்றும் தற்போதுள்ளமக்கள்தொகை 103800 ஆகும்.மேலும் இந்நகராட்சியின் பரப்பளவு 30.67 சதுர கிலோமீட்டர் கொண்ட 36 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகரில் மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 27950 ஆகும்.

உதகமண்டலம் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பராமரிப்பு செய்யும் பணியாளர்கள் எண்ணிக்கை 58 ஆகும், தற்போது18 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் நகரில் பாதாள சாக்கடை பராமரிப்பு திட்ட பணிகளை மேற்கொள்ளவது மிகவும் சிரமமாக உள்ளது.

ஏனவே நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி நியமனம் செய்ய உரியவழி முறைகள் வழுங்கப்பட்டதன் பேரில், இந்நகராட்சி பாதாள சாக்கடை பராமரிப்புபணிகள் மேற்கொள்ள தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் நியமானம் செய்ய கீழ்க்கண்டுள்ளவாறு கருத்துரு தயார் செய்யபப்பட்டுள்ளது.

இந்நகராட்சி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்ணயம் செய்யப்பட்டுள்ளஅளவுகோல் படி தேவைப்படும் பாதாள சாக்கடை பராமரிப்பு பணியாளர்கள் விவரம்

| வ. எண் | பணிவிவரம் | ஆளவுகோல் படி (As Per Norms) தேவைப்படும் பணியாட்கள் | தற்போது பணிபுரியும் பணியாட்கள் | தேவைப்படும் பணியாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | பாதாளசாக்கடைபராமரிப்புப ணிமேற்கொள்ளதேவைப்படு ம் பணியாளர்கள் | 48 | 8 | 40 |
| | மொத்தம் | 48 | 8 | 40 |

இந்நகராட்சி பாதாள சாக்கடை பராமரிப்பு பணி மேற்கொள்ள தேவையான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆண்டு ஒன்றிற்கு ரூ.104.64 இலட்சம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு உத்தேச செலவினம் ரூ.104.64*3=ரூ.313.92/-இலட்சம் செலவினத்திற்கு தனி அலுவலர் அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. **உதகமண்டலம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின கீழ் பராமரிப்பு பணி 3 வருடங்கள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைஅவர்கள்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர தனிஅலுவலர்அனுமதிக்கலாம்.**
2. **ஒப்பந்த செய்யும் நாளிலிருந்து 1 ஆண்டு முடியும் போது பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்தத் தொகை உயர்வு செய்து மன்ற ஒப்பதலுடன் ஒப்பந்தம் புதுப்பிக்கமன்றம் அனுமதிக்கலாம்.**
3. **பணி உத்தரவு நாளிலிருந்து ஒரு வருடம் கலத்திற்கான உத்தேச செலவினத் தொகைரூ.104.64/-இலட்சதினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்:7875/2021/இ1)**

**தீர்மான எண்.2805 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

5. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:21287/2021/EA2, நாள்:02.10.2021ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை, வடிகால் பராமரிப்பு மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிக்கு பணியாளர்களை பணியமார்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து வழங்கியுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி உதகமண்டலம் நகராட்சிக்கு கீழ்க்கண்டுள்ளவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

**<u>திடக்கழிவு மேலாண்மை</u>**

உதகமண்டலம் நகராட்சி 1866ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு 1987ம் ஆண்டு முதல் சிறப்புநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 88430 மற்றும் தற்போதுள்ள மக்கள் தொகை 103800 ஆகும். மேலும் இந்நகராட்சியின் பரப்பளவு 30.67 சதுர கிலோ மீட்டர் கொண்ட 36 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகரில் மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 28015 ஆகும்.

உதகமண்டலம் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தூய்மைப் பணியாளர்கள் எண்ணிக்கை 321 ஆகும், தற்போது 142 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள், 179 பணியிடங்கள் காலியாகவுள்ளது. இதனால் நகரில் திடக்கழிவு மேலாண்மையின் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவது மிகவும் சிரமமாக உள்ளது.

ஏனவே நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் சுகாதாரப்பணிக்கு தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி நியமனம் செய்ய உரிய வழிமுறைகள் வழங்கப்பட்டதன் பேரில், இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மையின் வாயிலாக சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் நியமானம் செய்ய கீழ்க்கண்டுள்ளவாறு கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மையின் வாயிலாக சுகாதாரப்பணி மேற்கொள்ள நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவுகோல் படி தேவைப்படும் தூய்மைப்பணியாளர்கள் விவரம்

| வ. எண் | பணி விவரம் | ஆளவுகோல் படி (As Per Norms) தேவைப்படும் பணியாட்கள் | தற்போது பணிபுரியும் பணியாட்கள் | தேவைப்படும் பணியாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை சுகாதாரப்பணி மேற்கொள்ள தேவைப்படும் பணியாளர்கள் | 185 | 142 | 43 |
| | **மொத்தம்** | **185** | **142** | **42** |

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மையின் வாயிலாக சுகாதாரப்பணிக்கான வாகன ஓட்டுநர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவுகோல் படி தேவைப்படும் ஓட்டுநர்கள் விவரம்

| வ. எண் | பணி விவரம் | ஆளவுகோல் படி (As Per Norms) தேவைப்படும் பணியாட்கள் | தற்போது பணிபுரியும் பணியாட்கள் | தேவைப்படும் பணியாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை சுகாதாரப்பணிக்கான வாகன ஓட்டுநர்கள் | 33 | 9 | 24 |
| | **மொத்தம்** | **33** | **9** | **24** |

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மையின் வாயிலாக சுகாதாரப்பணிகளை மேற்பார்வையிட நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவுகோல் படி தேவைப்படும் துப்புரவுபணி மேற்பார்வையாளர்கள் விவரம்

| வ. எண் | பணி விவரம் | ஆளவுகோல் படி (As Per Norms) தேவைப்படும் பணியாட்கள் | தற்போது பணிபுரியும் பணியாட்கள் | தேவைப்படும் பணியாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை சுகாதாரப்பணிக்கான மேற்பார்வையிட தேவைப்படும் துப்புரவுபணி மேற்பார்வையாளர்கள் | 18 | 12 | 6 |
| | **மொத்தம்** | **18** | **12** | **6** |

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை சுகாதாரப் பணிக்கு தேவையான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆண்டு ஒன்றிற்கு ரூ.206.34 இலட்சம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கான உத்தேச செலவினம் ரூ.206.34*3=ரூ.619.02/- இலட்சம் செலவினத்திற்கு தனி அலுவலர் அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **உதகமண்டலம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் சுகாதாரப்பணிகள் 3 வருடங்கள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர தனி.அலுவலர் அனுமதிக்கலாம்).**
2. **பணி உத்தரவு வழங்கும் நாளிலிருந்து ஒராண்டு முடியும் போது பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்தத் தொகை உயர்வு செய்து மன்ற ஒப்பதலுடன் ஒப்பந்தம் புதுப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**
3. **பணி உத்தரவு வழங்கும் நாளிலிருந்து ஒரு வருடக் கலத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.619.02/- இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி.அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்:10891/2015/எச்1)**
   **தீர்மான எண்.2806 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**6.** தேர்தல் – உதகமண்டலம் நகராட்சியில் நடைப்பெறவுள்ள சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2021 நடத்த தேவைப்படும் தேர்தல் உத்தேச செலவின தொகை ரூ.95.00/– லட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
   **(ந.க.எண்.சி2/2114/2021)**
   **தீர்மான எண்.2807 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**7.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குல்முகமது சாலையில் அமைந்துள்ள நகராட்சி ஆணையாளர் குடியிருப்பு மிகவும் பழுதடைந்து மழை காலங்களில் மழைநீர் வீட்டினுள் வருவதனால் குடியிருக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே பழுதடைந்துள்ள ஆணையாளர் குடியிருப்பினை புதுப்பிக்கும் பொருட்டு மேற்கூரையில் பழுதடைந்துள்ள GI Sheet மற்றும்

ஒடுகளை மாற்றியமைத்து, பழுதடைந்த கதவு மற்றும் ஜன்னல்களை புதிதாக மாற்றியமைக்கவும், சுவர் மற்றும் தரை தளத்தினை பிளாஸ்ட்ரிங் செய்து புதுப்பித்து சுவற்றிற்கு வர்ணம் பூசி புதுப்பிக்கவும், மேலும் பழுதடைந்துள்ள மின் இணைப்பினை மற்றம் குடிநீர் இணைப்புகளை சரி செய்யவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/9717/2021)**
   **தீர்மான எண்.2808 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

8. இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 02.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட தினசரி மார்கெட் பகுதியில் கார் பார்க்கிங்வுடன் கூடிய கடைகள் கட்டுவதற்கு கலந்தாலோசர் மூலம் Fiscal Feasiblity Reort along with ball park estimation தயாரிக்கும் பணி | 4.99 |

| **வ.எண்** | **ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரின் பெயர் மற்றும் சதவிகிதம்** |
|---|---|---|
| 1 | M/S RPV Engineering consultants, Mysore அவர்கள் 0.002% மதிப்பீட்டை விட குறைவு | M/S RPV Engineering consultants, Mysore அவர்கள் 0.002% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S Synthesis Design Studio, Bangalore அவர்கள் 0.13% மதிப்பீட்டை விட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/5550/2021)**
   **தீர்மான எண்.2809 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

9. இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 02.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட தினசரி மார்கெட் பகுதியில் கார் பார்க்கிங்வுடன் கூடிய கடைகள் கட்டுவதற்கு கலந்தாலோசர் மூலம் Design Conceptualization Floor Plans & Detailed area Statement தயாரிக்கும் பணி | 4.99 |

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரின் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/S RPV Engineering consultants, Mysore அவர்கள் 0.002% மதிப்பீட்டை விட குறைவு | M/S RPV Engineering consultants, Mysore அவர்கள் 0.002% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S Synthesis Design Studio, Bangalore அவர்கள் 0.13% மதிப்பீட்டை விட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/5550/2021)**
   **தீர்மான எண்.2810 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

10. நகராட்சி எல்லைக்குட்பட்ட தலையாட்டிமந்து பகுதியில் மேல்தலையாட்டிமந்து செல்லும் நடைபதையின் நடுவில் உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவு நீர் செல்ல இயலாமல் நடைபாதையின் மேற்புறத்தில் கழிவுநீர் செல்கிறது. பொதுமக்கள் அனைவரும் அந்நடைபாதையின் வழியாக தான் செல்ல வேண்டும் மற்றும் அருகில் உள்ள வீடுகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அந்நடைபாதையில் உள்ள பாதாளசாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவிம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/9250/2021)**
   **தீர்மான எண்.2811 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**11.** இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தை உட்புறம் உள்ள கடை எண்.7/10, வ.வி.எண்.1506ன் குத்தகை உரிமதாரர், திரு.சிவராஜ் த/பெ.லிங்கா கவுடர் என்பவரால் கடை நடத்த இயலாத காரணத்ததால், மேற்காணும் கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. எனவே இக்கடையினை பொது ஏலம் விடவும் கணிணியில், டிசம்பர் 2021 முதல் கேட்பினை எழுப்பா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளவும், தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும், கணிணியில் டிசம்பர் 2021 முதல் கேட்பினை எழுப்பாமல் நிறுத்தி வைக்கவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.அ7/8965/2021)**
   **தீர்மான எண்.2812 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

12. இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தை உட்புறம் உள்ள வ.வி.எண்.2329 கொண்ட கடையின் குத்தகை உரிமதாரர், திரு.லட்சுமணக்குமார், என்பவரால் கடை நடத்த இயலாத காரணத்ததால், கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. எனவே இக்கடையினை பொது ஏலம் விடவும் கணிணியில், அக்டோபர் 2021 முதல் கேட்பினை எழுப்பா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளவும், தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும், கணிணியில் அக்டோபர் 2021 முதல் கேட்பினை எழுப்பாமல் நிறுத்தி வைக்கவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.அ7/8265/2021)**
   **தீர்மான எண்.2813 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

13. இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தை உட்புறம் உள்ள வ.வி.எண்.2331 கொண்ட கடையின் குத்தகை உரிமதாரர், திரு.ஜே.லட்சுமணக்குமார், என்பவரால் கடை நடத்த இயலாத காரணத்ததால், கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. எனவே இக்கடையினை பொது ஏலம் விடவும் கணிணியில், அக்டோபர் 2021 முதல் கேட்பினை எழுப்பா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளவும், தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும், கணிணியில் அக்டோபர் 2021 முதல் கேட்பினை எழுப்பாமல் நிறுத்தி வைக்கவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.அ7/8266/2021)**
   **தீர்மான எண்.2814 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

14. இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தை உட்புறம் உள்ள கடை எண்.7 வ.வி.எண்.1580ன் குத்தகை உரிமதாரர், திரு.எம்.சிவராஜ் என்பவரால், கடை நடத்த இயலாத காரணத்ததால், மேற்காணும் கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. எனவே இக்கடையினை பொது ஏலம் விடவும் கணிணியில், டிசம்பர் 2021 முதல் கேட்பினை எழுப்பா வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**

2. **பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும், கணிணியில் டிசம்பர் 2021 முதல் கேட்பினை எழுப்பாமல் நிறுத்தி வைக்கவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.அ7/8964/2021)**
   **தீர்மான எண்.2815 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**15.** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து தமிழ்நாடு அரசின் 100 நாள் சாதனை மலரில் வெளியிடுவது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் தினசரி நாளிதழ்களால் விளம்பரங்கள் வழங்க கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது, எனவும் மேற்படி தினசரி நாளிதழ்களில் அரசின் 100 நாள் சாதனை விபரங்களை வெளியிட அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதி இருப்பின் இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை நிர்ணயத்துள்ள கட்டணத்தின்படி தினசரி நாளிதழ்களில் தொழில் மலரில் அரசின் விதிமுறைக்குட்பட்டு விளம்பரங்கள் வழங்கிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரசின் 100 நாள் சாதனை குறித்த சாதனை மலரில் விளம்பரம் செய்திட தினகரன், தினமணி, தினமலர் மற்றும் தினபூமி ஆகிய நாளிதழ்களுக்கு அனுமதி வழங்கவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சத்திற்கு) தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ1/5974/2021)**
   **தீர்மான எண்.2816 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**16.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 12.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட ATC சதுக்கத்திற்கு வர்ணம் பூசுதல் மற்றும் மராமத்த மேற்கொள்ளும் பணி | 2.50 |

| **வ.எண்** | **ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரின் பெயர் மற்றும் சதவிகிதம்** |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.ஆர்.முரளிகுமார் அவர்கள் 0.01% மதிப்பீட்டை விட குறைவு | திரு.எஸ்.ஆர்.முரளி குமார் அவர்கள் 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.நந்தகுமார் அவர்கள் 1.52% மதிப்பீட்டை விட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/6219/2021)**
   **தீர்மான எண்.2817 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**17.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 12.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 கிருஷ்ணா கோவில் அருகில் நகராட்சியின் பொது கழிப்பிடம் பழுது பார்க்கும் பணி | 7.05 |

| **வ.எண்** | **ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரின் பெயர் மற்றும் சதவிகிதம்** |
|---|---|---|
| 1 | திரு.பி.ராஜசேகர் அவர்கள் 0.19% மதிப்பீட்டை விட குறைவு | திரு.பி.ராஜசேகர் அவர்கள் 0.19% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.பி.மரியராஜ் அவர்கள் 3.48% மதிப்பீட்டை விட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/8506/2021)**
   **தீர்மான எண்.2818 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**18.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 12.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக பதிவு காப்பறை மராமத்து மேற்கொள்ளும் பணி | 7.00 |

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரின் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.ஆர்.முரளிகுமார் அவர்கள் 0.11% மதிப்பீட்டை விட குறைவு | திரு.எஸ்.ஆர்.முரளி குமார் அவர்கள் 0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.நந்தகுமார் அவர்கள் 1.16% மதிப்பீட்டை விட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/8506/2021)**
   **தீர்மான எண்.2819 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**19.** உதகமண்டலம் நகராட்சியானது சிறப்பு நிலை நகராட்சி மற்றும் சிறந்த சுற்றுலாத் தளமாகவும் விளங்குகிறது. இங்கு அரசு தாவரவியல் பூங்கா, படகு இல்லம், ரோஜா பூங்கா, கர்நாடகா பூங்கா மற்றும் தொட்டபெட்டா மலைசிகரம் ஆகிய சுற்றுலா பொழுது போக்கு அம்சங்கள் அமைந்துள்ளதால் ஆண்டு தோறும் இங்கு பல இலட்சக்கணக்கான உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர். தினசரி சுமார் 25,000 சுற்றுலாப் பயணிகள் பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தினால் வாகனங்களை ஆங்காங்கே சாலை ஓரங்களில் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் வாகனங்களை நிறுத்தி விடுவதால் அதிக அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே (MRC) குதிரை பந்தைய மைதானத்தில் 1.50 ஏக்கர் நிலப் பரப்பில் பல்நோக்கு வாகன நிறுத்தம் கட்டுவதற்காக திட்ட ஆலோசகரை நியமித்து 1. Floor Plan 2. 3D Elevation 3. Walk throw video 4. General arrangements drawing 5. Elevation ஆகிய இனங்களுடன் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.99/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ1/5974/2021)**
   **தீர்மான எண்.2820 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

20. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளதற்கிணங்கவும், ஆணையாளர் அவர்களின் குறிப்புகளின் படியும் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நகராட்சிகளிலும் தனியார் வெளிகொணர்வு நிறுவன ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினசரி கூலியானது வெவ்வேறு தொகையாக உள்ளதினால், தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளின் ஒரே மாதிரியான அடிப்படை

தினசரி கூலி விகிதம் நிர்ணயம் செய்யும் பொருட்டு கோரிய கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துருக்களின் அடிப்படையில் குறைந்தபட்ச தினசரி கூலி நிர்ணயம் செய்து உரிய உத்தரவு நாளது தேதிவரை வரப்பெறாதக் காரணத்தினாலும், உத்தரவு பெறப்படும் வரை பொறியியல் பிரிவு ஜே.சி.பி. வாகனம் இயக்க ஓட்டுநர் பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்தின் பணி உத்தரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விலை விகிதத்திலேயே (ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகை) தொடர்ந்து மேற்கொள்ள மூன்று மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கவும், மேற்காணும் பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.4.20 இலட்சத்திற்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **பொறியியல் பிரிவு அவசர அவசியம் கருதி மூன்று மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்ய தனி அலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.20 இலட்சத்தினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**
3. **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டுள்ள தனியார் வெளிக் கொணர்வு ஒப்பந்த நிறுவனம் மேற்படி பணிகளை செய்து வர அவசர மற்றும் அவசியம் கருதி அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/1421/2021)**
   **தீர்மான எண்.2821 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

21. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளதற்கிணங்கவும், ஆணையாளர் அவர்களின் குறிப்புகளின் படியும் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நகராட்சிகளிலும் தனியார் வெளிகொணர்வு நிறுவன ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினசரி கூலியானது வெவ்வேறு தொகையாக உள்ளதினால், தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளில் ஒரே மாதிரியான அடிப்படை தினசரி கூலி விலை விகிதம் நிர்ணயம் செய்யும் பொருட்டு கோரிய கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துருக்களின் அடிப்படையில் குறைந்தபட்ச தினசரி கூலி நிர்ணயம் செய்து உரிய உத்தரவு நாளது தேதி வரை வரப்பெறாதக் காரணத்தினாலும், உத்தரவு பெறப்படும் வரை பொறியியல் பிரிவு நகர் பகுதிகளில் பாதாள சாக்கடை பணியாளர்கள் (ஏழு நபர்கள்) பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கும் வரை தற்போது பணி செய்து வரும் மேற்படி தனியார் நிறுவனத்தின் பணி உத்தரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விரை விகிதத்திலேயே (ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகை) தொடர்ந்து மேற்கொள்ள மூன்று மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கவும், மேற்காணும் பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.23.00/– இலட்சத்திற்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **பொறியியல் பிரிவு அவசர அவசியம் கருதி மூன்று மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்ய தனி அலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.23.00 இலட்சத்தினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**

3. **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டுள்ள தனியார் வெளிக் கொணர்வு ஒப்பந்த நிறுவனம் மேற்படி பணிகளை செய்து வர அவசர மற்றும் அவசியம் கருதி அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/10699/2020)**
   **தீர்மான எண்.2822 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

22. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளதற்கிணங்கவும், ஆணையாளர் அவர்களின் குறிப்புகளின் படியும் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நகராட்சிகளிலும் தனியார் வெளிகொணர்வு நிறுவன ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினசரி கூலியானது வெவ்வேறு தொகையாக உள்ளதினால், தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளில் ஒரே மாதிரியான அடிப்படை தினசரி கூலி விலை விகிதம் நிர்ணயம் செய்யும் பொருட்டு கோரிய கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துருக்களின் அடிப்படையில் குறைந்தபட்ச தினசரி கூலி நிர்ணயம் செய்து உரிய உத்தரவு நாளது தேதி வரை வரப்பெறாதக் காரணத்தினாலும், உத்தரவு பெறப்படும் வரை பொறியியல் பிரிவு பாதாள சாக்கடை காந்தல் பகுதிகளில் பணியாளர்கள் (ஆறு நபர்கள்) பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கும் வரை தற்போது பணி செய்து வரும் மேற்படி தனியார் நிறுவனத்தின் பணி உத்தரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விரை விகிதத்திலேயே (ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகை) தொடர்ந்து மேற்கொள்ள மூன்று மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கவும், மேற்காணும் பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.23.00/– இலட்சத்திற்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **பொறியியல் பிரிவு அவசர அவசியம் கருதி மூன்று மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்ய தனி அலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.23.00 இலட்சத்தினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**
3. **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டுள்ள தனியார் வெளிக் கொணர்வு ஒப்பந்த நிறுவனம் மேற்படி பணிகளை செய்து வர அவசர மற்றும் அவசியம் கருதி அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/10699/2020)**
   **தீர்மான எண்.2823 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

23. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.6ல் கோடப்பமந்து பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டு உள்ள மூன்றாவது குடிநீர் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட 1 லட்சம் கொள்ளவு கொண் தரை மட்ட தொட்டியில் இருந்து 60 HP நீர்முழ்கி மோட்டார் மூலம் மேல்கோடப்பமந்து வண்ணாரப்பேட்டை ஆரணி ஹவுஸ், ஒல்டு ஊட்டி ஆகிய பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கோடப்பமந்து பள்ளி வளாகத்தில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் உள்ள 60 HP நீர்முழ்கி மோட்டார் இரண்டு எண்கள் பழுதடைந்து விட்டதால் மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் தடைபட்டு உள்ளது. எனவே மேற்கண்ட 60 HP நீர்முழ்கி மோட்டாரை பழுது நீக்கம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். ஏனவே மேற்கண்ட 60 HP நீர்முழ்கி மோட்டாரை பழுது நீக்கம் செய்ய

தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50/— இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/10018/2020)**
   **தீர்மான எண்.2824 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**24.** உதகமண்டலம் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள JCB வாகனம் TN43E1203 உள்ளது. இந்த வாகனம் தூர்வாருதல், மண் அகற்றுதல், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை உடைப்பு சரிசெய்தல், சாலை மண் சரிவு அகற்றம் போன்ற பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி வாகனத்திற்கு தற்போது நகராட்சியில் ஓட்டுனர்/ இயக்குநர் இல்லை. மேலும் தற்போதுள்ள ஓட்டுனர்களை இந்த வாகனம் ஒட்ட/ இயக்க உபயோகப்படுத்த இயலாத நிலை உள்ளது.

எனவே மேற்படி JCB வாகனத்தை இயக்க தொழில் நுட்பம் தெரிந்த, தேர்ச்சி பெற்ற தகுதி வாய்ந்த நபர் ஒருவரை (JCB Operator) தனியார் நிறுவனத்திடம் இருந்து விநியோகம் செய்து மேற்படி வாகனத்தை பயன்படுத்த வேண்டியுள்ளது.

எனவே JCB Operator ஐ தனியார் நிறுவனத்திடம் இருந்து விநியோகம் செய்யும் வகையில் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4,20,000/— க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **தனியார் நிறுவனத்திடம் இருந்து JCB Operator ஐ விநியோகம் செய்ய மேற்படி மதிப்பீட்டின் படி அனுமதிக்கலாம்.**
2. **இப்பணிக்கு குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/10017/2020)**
   **தீர்மான எண்.2825 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**25.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.30 ஆர்.கே.புரம் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பம்ப ஹவுஸ் ல் உள்ள 8.00 லட்சம் கொள்ளவு கொண்ட தரை மட்ட நீர்த் தேக்க தொட்டியில் இருந்து 40 HP நீர் முழ்கி மோட்டார் மூலம் எல்க்ஹில், பாம்பே கேசில், நொண்டிமேடு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது அதிக மின் அழுத்தத்தினால் இந்த தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் உள்ள 40 HP நீர் முழ்கி மோட்டார் ஆனது பழுதடைந்து உள்ளது. அதனால் மேற்கண்ட பகுதியான எல்க்ஹில், பாம்பே கேசில், நொண்டிமேடு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய 40 HP நீர் முழ்கி மோட்டார் மற்றும் அதன் Panel Board ஆகியவற்றை பழுது நீக்கம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகும், இதற்காக தயாரிக்கபட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50/— இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/10016/2020)**
   **தீர்மான எண்.2826 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

26. இந்நகராட்சி பொறியாளர் பிரிவில் இ1, இ5 மற்றும் இ3 இருக்கைகளில் பயன்படுத்தப்பட்டு வந்த கணினிகளில் பழுது ஏற்பட்டுள்ளதால், கணினியில் பணி மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இளநிலை பொறியாளர் மற்றும் இ5 எழுத்தருக்கு 1 எண் பிரிண்டரும் தேவைப்படுகிறது.

எனவே 4 எண் கணினிகள் மற்றும் 2 எண் பிரிண்டரும் வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.4.90 இலசட்த்திற்கு தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. மேலும் இத்தொகையினை வருவாய் நிதியின் கீழ் வழங்கவும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. **மேற்படி செலவின தொகை ரூ. 4.90 இலட்சத்தில் கணினிகள் மற்றும் பிரிண்டர் வாங்கவும் செலவின தொகையை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மான எண்.2827 – அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது**

**தனி அலுவலர் (ம)ஆணையாளர்,**
**உதகமண்டலம் நகராட்சி**